ஹரோ தமிழ் பாடசாலை பேச்சுப் போட்டி 2026
ஆண்டு - 7 (Year 7)

1/09/2014 - 31/08/2015 பிறந்தவர்கள்

(ஹரோ தமிழ்ப் பாடசாலையின் தமிழ் வகுப்பு மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர்)

போட்டி நடைபெறும் திகதி 21/11/2026

நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது

# தமிழர்

*“தமிழன் என்றோர் இனமுண்டு, தனியே அவற்கொரு குணமுண்டு”*

அமிழ்தினும் இனிய தமிழ்மொழி பேசும் தமிழர்கள், அன்பைத் தம் வாழ்வின் அடிப்படையாகக் கொண்டவர்கள். அறம் பல புரிந்து, சிறந்த பண்பாடுகளை மதித்து வாழ்பவர்கள். சங்கம் அமைத்துத் தமிழ் வளர்த்த காலம் முதல் இன்றுவரை உயர்பண்புகளைத் தம்மிடையே பேணி வருகின்றனர்.

நாகரிகம் காலத்திற்குக் காலம் மாறினாலும் பண்பாடு என்றும் மாறாமல் இருப்பதைத் தமிழர் தம் வாழ்வில் நாம் காணலாம். தமிழர் பண்பாட்டில் தலைசிறந்தது மானம். மானம் என்றால் தன் நிலையிலிருந்து தாழாமல் இருத்தல்; தாழ்வு வந்தால் உயிர் வாழாமல் இருத்தல். போரிலே சிறைப்பட்ட சேரமான் இரும்பொறைக்கு, சிறைக்காவலன் ஒருவன் மன்னனுக்குரிய மாண்பினை அளிக்கவில்லை. "பகைவர் கை பட்டு மானம் இழந்து இரந்துண்ணும் நிலை வந்ததே" என மன்னன் வருந்தினான். உயிரை விட மானமே பெரிதென உயிர் நீத்தான். ஆம்! மானத்தை உயிரினும் மேலாக மதிப்பவன் தமிழன்.

அது போலவே தமிழர்கள் கொடைப்பண்பிலும் சிறந்து விளங்கினார்கள். முல்லைக்குத் தேர் கொடுத்தான் பாரி; மயிலுக்குப் போர்வை கொடுத்தான் பேகன்; புலவனுக்குத் தலையையே கொடுக்கத் துணிந்தான் குமண வள்ளல்.

இவை மட்டுமல்ல, விருந்தோம்பல் தமிழர் வாழ்வில் முக்கிய பண்பாகும். திருவள்ளுவர், விருந்தோம்பலுக்கு ஓர் அதிகாரத்தையே திருக்குறளில் ஒதுக்கியுள்ளார். காக்கைகள் பகிர்ந்து உண்பது போல் நாம் இருக்க வேண்டும் என்றான் பாரதி. அது போல் தமிழர்களாகிய நாமும் அறம் காத்து நற்பண்புகளுடன் வாழ்வோம்.

'தமிழன் என்று சொல்லடா; தலை நிமிர்ந்து நில்லடா' என்று கூறி என் சிற்றுரையை முடிக்கிறேன்.